உ

சிவமயம்



மலேசியாவில் பிறந்து, கல்விபயின்று அங்கு பணி
புரிந்தவரும்
யாழ்ப்பாணம் பண்ணாகத்தைச் சேர்ந்தவரும்
தொல்புர வாசரும், உயர்குணச் செம்மலுமான

அமரர்

## சின்னத்துரை நடராசா


அவர்களின்

# நினைவு மலர்

28-01-1994

உ

சிவமயம்



# திரு. சின்னத்துரை நடராசா

அவர்கள்

**பிறப்பு**
**28-11-1927**

**இறப்பு**
**29-12-1993**

## திதி வெண்பா

சின்னத் துரைமைந்தர் சீரார் நடராசா
தன்னுடலை விட்டிறைதாள் சார்ந்ததிதி — என்னவெனில்
ஆண்டு ஸ்ரீமுகத் தாமார் கழியபரத்
தீண்டு துதியையே யாம்.

# திருவருட்பாக்கள்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகு கொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

## திருவாசகம்

கண்கள் இரண்டும் அவன் கழல்
கண்டு களிப்பன ஆகாதே
காரிகையார்கள் தம் வாழ்வில்
என் வாழ்வு கடைப்படும் ஆகாதே
மண்களில் வந்து பிறந்திடும் ஆறு
மறந்திடும் ஆகாதே
மால் அறியா மலர்ப் பாதம்
இரண்டும் வணங்குதும் ஆகாதே
பண் களி கூர் தரு பாடலோடு
ஆடல் பயின்றிடும் ஆகாதே
பாண்டிநல் நாடு உடையான்
படை ஆட்சிகள் பாடுதும் ஆகாதே
விண் களி கூர்வது ஓர் வேதகம்
வந்து வெளிப்படும் ஆகாதே
மீன் வலை வீசிய கானவன்
வந்து வெளிப்படும் ஆயிடிலே.

## திருவிசைப்பா

சுருதி வானவனாந் திருநெடு மாலாஞ்
சுந்தர விசும்பி னிந்திரனாம்
பருதி வானவனாம் படர்சடை முக்கட்
பகவனா மகவுயிர்க் கமுதாம்
எருதுவாகனனாம் எயில்கள் மூன்றெரித்த
ஏறுசேவகனுமாம் பின்னும்
கருதுவார் கருது முருவமாங் கங்கை
கொண்ட சோளேச்சரத்தானே.

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக
    நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத வறிவு பெற்றேன்
    பெற்றதார் பெறுவா ருலகில்
ஊரு முலகுங் கழற வுழறி
    உமை மண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
    பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள
    அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றும்
    திருந்து சாத்துவிகமே யாக
இந்துவாழ் சடையான் ஆடுமானந்த
    எல்லையில் தனிப் பெருங் கூத்தின்
வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்து
    மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
    முத்தனா மாறெனைப் பெருவாழ்வில்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
    உத்தமா தானசற் குணநேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
    வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றிவேலாயுதப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாதுபெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்.

## மாணிக்க வாசகர் அருளிய திருவாசகம்

# சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் அடி வாழ்க
வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க
ஈசன்அடி போற்றி எந்தை அடிபோற்றி
தேசன்அடி போற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன்அடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன்அடி போற்றி
ஆராத இன்பம் அருளும்மலை போற்றி
சிவன் அவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவன்அரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓயஉரைப் பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல் இறைஞ்சி
விண்நிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே நின் பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழும் ஆறு ஒன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்மிருகம் ஆகிப் பறவையாய்ப்பாம் பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்துஅகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானன் ஆம்விமலா
பொய்ஆயின எல்லாம் போய்அகல வந்தருளி
மெய்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவுஇறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம் கழிய நின்றமறை யோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தால் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாயை இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்துஎங்கும் புழுஅழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை

மலங்கப் புலன்ஐந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகி கசிந்துஉள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசம் ஆம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாய்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்துஎன்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்அரிய நோக்கே நுணுக்அரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வும்இலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றுஇன்ப வெள்ளமே அத்தா மிக்காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய் சொல்லா நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப

ஆற்றேன் எம்ஐயா அரனேஓ என்றுஎன்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய் கெட்டு மெய்யானார்
மீட்டுஇங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லல் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற்கு அரியானை சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

## அபிராமி அந்தாதி

தனந்தருங் கல்வி தருமொரு நாளுந் தளர்வறியா
மனந்தருந் தெய்வ வடிவுந் தருநெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரு நல்லன வெல்லாந் தருமன்ப ரென்பவர்க்கே
கனந்தரும் பூங்குழ லாளபி ராமி கடைக்கண்களே.



# வாழ்வு வளம்

'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்பது தமிழ் மூதாட்டி ஔவையின் அமுதமொழி. இதனைத் தமது தாரகமந்திரமாகக் கொண்டு மலேசியா சென்று அங்குத் தொழில் புரிந்து வாழ்ந்த பெரியார் இராமசாமி சின்னத் துரை ஆவார். இவரின் வாழ்க்கைத் துணைவியாராய் அமைந்தவர் செல்லப்பா சிவக்கொழுந்து அம்மையார். இவர்களின் இனிய இல்லறத்தின் பண்பும் பயனுமாகத் தோன்றிய அரும் பெறற் புதல்வரே அண்மையில் அமர ரான நடராசா.

நடராசா அவர்களின் உடன்பிறந்தாரின் விபரம் வருமாறு:

1. அமரர் இந்திரராஜா (மலேசியாவில் வாழ்ந்து அமர ரானவர்)
2. சிவராமலிங்கம் — அதிபர். மலேசியா
3. திருமதி தம்பிராசா மனோன்மணி (கொழும்பு)
4. திருமூர்த்தி — தனியார் கம்பனி முகாமையாளர், சிங்கப்பூர்)
5. திருமதி கதிர்காமத்தம்பி பூமாதேவி — (சிங்கப்பூர்)
6. திருமதி மனோகரன் ருக்மணி - (லண்டன்)
7. திருமதி எஸ். தங்கமலர் - (சிங்கப்பூர்)
8. திருச்செல்வம் (பொறியியலாளர் - பிரான்ஸ்)

இத்தகைய நற்குடிப் பிறப்பு, நற்பெற்றோர்ப் பேறு, இனிய உடன்பிறந்தார்ப் பேறு ஆகியவற்றோடு தோன்றிய நடராசா, வளர்பிறை என வளர்ந்து, கற்பனகற்று, (கற்ற மொழிகள் ஆங்கிலம், மலாய்), 1947 இல் போணியோவில் மோட்டார்க் கம்பனி ஒன்றில் பணி புரியத்தொடங்கினார். பத்தாண்டுகளின் பின்னர் 1957 இல், சுப்பிரமணியம் சின்னம்மா தம்பதியரின் அரும்பெறற் புதல்வியான புஷ்பம்

என்பாரை அவர் மணந்து, இனிய நல்ல இல்லறத்தை நாடத்தியதன் பயனாக இத்தம்பதியருக்கு நன்மக்களாக மூவர் தோன்றி வாழ்வதற்கு இன்ப மூட்டினர். அவர்களின் விபரம் வருமாறு:

1. உமாதேவி (1957) விஞ்ஞான மாணி (B. Sc) பட்டம் பெற்று, திரு. திருமதி இராசரத்தினம் தம்பதியரின் புதல்வர் வசந்தன் அவர்களை மணந்து டென்மார்க்கில் வாழ்கின்றார். இவர்களின் புதல்வர் டான்சன்.
2. வளர்மதி (1959). இவர் அம்பலவாணபிள்ளை தம்பதியரின் புதல்வர் இராஜகோபாலை மணந்து டென்மார்க்கில் வதிகின்றார். புதல்வன் சத்திதாஸ், புதல்வி சர்மினி.
3. பிறேமா (1965) – யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்து நுண்கலைப்பிரிவில் (இராமநாதன் அக்கடமியில்) சங்கீதம் கற்று இசைக்கலைமணி (சங்கீத டிப்புளோமா) பட்டம் பெற்றுள்ளார்.

அன்புக் கணவராகவும், பாசமிகு தந்தையாகவும், உற்றார் உறவினருக்கு உறுதுணை புரிபவராகவும், நண்பர்க்கு இனிய துணைவராகவும் விளங்கிய அமரர் நடராசா, தம் மக்களைச் சான்றோராக்கி அவர்கள் நல்லவராகவும் வல்லவராகவும் விளங்க வழிசமைத்தார்; 1966 இல் மலேசியாவிலே பகிரங்க வேலைப் பகுதியிலே சேர்ந்து சேவையாற்றி 1982 இல் இளைப்பாறினார்; அதன் பின்னர் தாய்நாடு திரும்பி, தொல்புரத்தில் மனைவி மக்களோடு இன்பமான குடும்பவாழ்வினை நடத்திச் சிறந்தார்.

அமரர் அவர்களின் குடும்பத்தோடு மட்டும் அமைந்து விடவில்லை. தமது சூழலுக்கும், சமூகத்திற்கும் அவர் தந்நலம் கருதாது ஆற்றிய தொண்டுகள் நன்றியுடன் நினைவு

கூரத்தக்கன இவரின் பொதுநலப் பாங்கும், சமூகப்பணி களும் மிகச்சிறந்தவை என்பதற்கு, இந்த நினைவஞ்சலி நூலில் அன்பர்கள் பலரும் வழங்கியுள்ள பாராட்டுரைகளே தக்க சான்றுகளாகும்.

நல்லவராயும் வல்லவராயும் நாடு போற்றுபவராயும் விளங்கிய நடராசா அவர்கள், நில்லா உலகத்திலே தமது நிலையான புகழுடலை விடுத்து, மனைவி, மக்கள், உற்றார், உறவினர் நண்பர்கள் கூடிநின்று தமது இழப்பினை எண்ணிக் கசிந்தழ 29–12–1993 அன்று தில்லைக் கூத்த னின் குஞ்சிதபாத நீழலை அடைந்து நிலையான பேரின் பத்திற் கூடினார்.

> வையத்து வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
> தெய்வத்துள் வைக்கப்படும்.
>
> திருக்குறள்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

# அமரர் நடராசா அவர்களின்

பிரிவு குறித்துப் பாடிய

**கையறுநிலைப் பாடல்கள்**

## மனைவி புலம்பல்

மன்மதனும் இரதியும் போல் அன்பாற் கூடி
மாட்சிபெறும் இல்லறத்தை நடத்தி வந்தோம்
இன்பமுறப் புதல்வியர்கள் மூவர் பெற்றே
ஏற்றமவர்க் களித்துமிகப் பெருமை பூண்டோம்
என்றுமெனை உம்முயிராய் எண்ணி நீரும்
இதயத்தால் நேசித்து வந்தீர் ஐயா
என்புருக விழிநீரும் ஆறாய் ஓட
இன்றுநான் உம்பிரிவால் வருந்து வேனே.

## மக்கள் புலம்பல்

பாசமுடன் எமையுமது நெஞ்சில் வைத்துப்
பரிவோடு வளர்த்துநற் கலைகள் ஈந்து
நேசமுடன் நல்வாழ்வும் அமைத்த அப்பா?
நினைவெங்கும் உமையன்றி வேறுகாணோம்.
ஆசையுடன் கனிந்துநாம் "அப்பா" என்றே
ஆரையழைத் தின்புறுவோம் இனிஎம் வாழ்வு
தேசிழந்து பாழடையச் செய்து நீரும்
திருவிழிகள் மூடியதும் ஏனோ அப்பா!

## மருக்கள் புலம்பல்

தந்தைபோல் அன்பு காட்டித் தயவுடன் அறிவு சொல்லி
எந்தமைப் பேணி வந்த எங்களின் மாமா இன்று
சிந்தைநொந் தழுது நிற்கச் செய்துமே பிரிந்த தாலே
அந்தமில் இடரில் நாங்கள் ஆழ்ந்தமை அந்தோ! அந்தோ!

## பேரப்பிள்ளைகள் புலம்பல்

திருநாடாம் தாய்நாட்டை விட்டெம் பெற்றோர்
சென்றுபிற நாட்டினிலே வாழ்ந்த போதும்
அருமைபெறும் தாத்தாவே உம்மைப் பற்றி
அடிக்கடிஎந் தமக்குரைப்பர் கேட்டே உம்மை
மருவிடவே நினைந்தேங்கி இருந்தோம் ஆனால்
மாபாவியமன் உம்மைக் கொண்டு சென்றான்
உருகியுளம் கசிந்துநாம் அழுகின் றோம் நீர்
ஒருகாலும் முகங்காட்ட வரமாட் டீரோ?

## உடன்பிறப்பாளர் புலம்பல்

உடன்பிறப் பில்லா உடம்புபாழ் என்ற
உண்மையை அறிந்தஎம் உள்ளம்
திடமிழந் துன்றன் பிரிவினால் ஏங்கச்
செய்துமே விண்ணினை அடைந்தாய்
கடலென விழிநீர் பெருக்கியும் பயனென்
காலனின் கைபட்ட உன்னை
உடம்புடன் மீண்டும் காணவே முடியா
துருக்குலைந் தழுதனம் நாமே.

## தேற்றம்

மண்ணிற் பிறந்த மாந்தரெலாம்
மண்ணில் ஒருநாள் உடல்விட்டு
விண்ணை அடைவர் எவராலும்
மீண்டும் வருதல் இயலாது
திண்ணம் ஈதென் றுணர்ந்திடுவீர்
தெய்வம் ஆன நடராச
அண்ணல் நிலையும் அதுவேயாம்
ஆன்மா சாந்தி பெறத்தொழுவீர்.



# ஜி. எம். மருந்தகம்

யாழ்ப்பாணப் பதியில் தோன்றிய தோன்றல் சின்னத் துரை தரு செம்மல் நடராசர் சிவபதம் அடைந்த செய்தி கேட்டோம். பல நாள் பழகிய பெரியார் அவர்.

அவர் எங்கள் அனைவருக்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். சிரித்துச் சிரித்துப் பேசும் சீரியநண்பர். இனிய சுபாவமும் பொறுமையும் இணைந்தவர். புரிந்து ணர்வு மிக்கநேயர். பழகுவதற்குப் பண்பாடானவர்.

ஆன்மநேயம் மிகுந்தவர். அவர் பிரிவால் கலங்கும் குடும் பத்தவர்களுக்கு ஆறுதல்கூறுவதோடு அவரின் ஆன்மா சாந் தி அடைய இறைவனை வேண்டுகிறோம்.

ஜி. எம். மருந்தகம்

ந. கணேசலிங்கநாதன்
D. A. M. S (cey)

## அன்பின் உறைவிடம் அமரர் நடராசா

''வாழ்க்கை நிலையில்லாதது நீர்க்குமிழி போன்றது'' என்பதை தெ ரிந்திருந்தும் எனது வாழ்க்கைப்பாதையில் பலருடன் பல வருடங்கள் பழகினேன் ஆனால் கடந்த ஒரு சில வருடங்கள்தான் அமரர் நடராசா அவர்களுடன் பழகினேன். இவர் என் உள்ளத்தில் இருந்து நீங்காத இடத்தை பெற்றுவிட்டார். எப்படி இவரை என்னால் மறக்கமுடியும்.

திடமானசரீரம், தெளிவான சிந்தனை, பரந்தநோக்கம், பளிங்கு மனம், கள்ளம் கபடமற்ற பேச்சு கண்ணிய மான வாழ்க்கை இவைகள் தான் அன்னாரிடம் குடிகொண்டிருந்தது. எவருக்கும் எந்தத்தீங்கும் மனதாரக் கூட நினைக்காதவர் அமரர் நடராசா. குழந்தகளைப்போல சிரித்து சிரித்து மழலை மொழியில்பேசி எவருடைய கவலையையும் பறந்தோடச் செய்யும் அன்பின் உறைவிடம் அமரர் நடராசா. அவர் இப்படி திடீரென மறைவாரென யாருமே எதிர்பார்க்கவில்லை. அவ ருடைய இழப்பு ஈடுசெய்யமுடியாத தொன்றாகும். இந்த நல்ல மனி ரை இழந்து தவிக்கும் மனைவி, பிள்ளைகள் உற்றார், உறவினர் நண் பர்கள் அனைவருக்கும் எனது கண்ணீர் அஞ்சலி உரித்தாகுக. அவரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திப்போம்.

ஓம் சாந்தி

கலையகம்
கலைநகர்
சித்தன்கேணி

வி. ரி. கதிர்காமநாதன்
கிராம உத்தியோகத்தர்

# பூரண வாழ்வு

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்" என்பது வள்ளுவம்

அமரர் நடராசா, சிறியவர், பெரியவர் ஆண், பெண், உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற பாகுபாடின்றி எல்லோருடனும் அன்புடனும் பண்புடனும் இன்முகம்காட்டி மனம் விட்டு அளவளாவிக்குசலம் விசாரிப்பார். வாழ் நாளில் ஒரு பகைவரையேனும் சந்தித்திருக்காத அப்பாவி. மிதித்த இடத்துப் புல்லும் சாகாது என்று ஊர்மொழியில் சொல்லலாம். இத்தகைய நல்ல குணங்களால் தன்னோடு பழகியவர்களுடைய மனங்களிலெல்லாம் தனியிடத்தைப் பிடித்துக் கொண்டார்.

சுத்தம் அவருடைய உடன்பிறப்பு ஒரு நாளில் இருதடவைகளுக்கு மேல் குளிப்பதும் உண்டு உடலைத் தூய்மையாக வைத்திருப்பது போலவே உள்ளத்தையும் தூய்மையாக வைத்துக் கொண்டார். எக்காரணம் கொண்டும் அடுத்தவர் ஆக்கத்தில் பொறுமை கொள்ளாதவர் பிறர் ஆக்கத்திற் பெருவிருப்புடையவராகி மகிழ்வார். நடை, உடை, பாவனை எல்லாமே ஒரு தனித்துவம் வாய்ந்தது தான். அவரைப் பின் பற்றி நாம் படிக்க வேண்டியவை பல உண்டு ஆனால் அத்தகைய பொறுமை எல்லோருக்கும் வந்து விடுமா என்ன?

வீட்டில் வளர்க்கும் செல்லப்பிராணிகளிடத்து அன்பும் கருணையும் கொண்டவர். ஓய்வு நேரமெல்லாம் அவற்றைப் பராமரிப்பதிலேயே கழியும் அவையும் இவரைக் கண்டால் தங்கள் பிரியத்தை வெளிக் காட்டி மகிழும்.

மானிடப் பிறப்பின் இரகசியம் அறிந்த உத்தமர். சோதரமாய் இருந்த உடலை விட்டாய் பின் உயிர்க் ஆதாரமாய் உறுதுணையாய் வரப்போவது நன்று ஒன்றே என்று தெளிந்து நன்மையையே நாடித் துணைதேடிக் கொண்டார். இது எத்தனைபேருக்கு விளங்கும். படித்துப் பெரிதும் பட்டம் பெற்ற அறிஞர்களுக்கே இன்று இந்த உண்மை விளங்குவதில்லை. தருமம் விளங்கிய சிலரும் வாழ்ந்துதான் இருக்கின்றார் போலும்.

இத்தகையதொரு சிறந்த வாழ்வை வாழ்ந்து பூரணத்துவம் அடைந்த அன்னாரின் ஆன்மா சாந்தி பெறுவதாக.

இங்ஙனம்

**செல்வி இரத்தினம் சுப்பிரமணியம்**

பண்ணாகம்

(ஓய்வுபெற்ற ஆசிரியை)

# அமரர் சின்னத்துரை நடராசா
(மலாயன் பென்சனர்)

29-12-93 புதன்கிழமை மறக்க முடியாத ஒரு நாளாகும். அன்று தான் எங்கள் அன்பிற்கும் நட்பிற்கும் மதிப்புக்குமுரிய அண்ணர் சி. நடராசா எங்களை விட்டுப் பிரிந்து அமரத்துவம் எய்தநாளாகும். ஆனால் அவரின் மலர்ந்த முகம், புன் சிரிப்பு, குழந்தைப்பேச்சு, வெள்ளை உள்ளம், அன்பு, இரக்கம், கள்ளம் கபடம், வஞ்சனை சூது வாது இல்லாத நல்ல பண்பு நல்லொழுக்கம் முதலிய சிறந்த குணங்களையுடைய உத்தமன். யார் கோபித்து ஏசினாலும் கிண்டல் செய்தாலும் தானும் சிரித்து மற்றவர்களையும் சிரிக்க வைத்து இன்புறும் சாந்தகுணம் படைத்த உத்தமன். அன்னாருடைய திடீர் மறைவு எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தியது.

அன்னாரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கு எந்தவகையில் ஆறுதல் கூறுவதென்று விளங்கவில்லை. எத்துணைதான் அழுது புரண்டாலும் மாண்டார் வருவதுண்டோ? இல்லவே இல்லை இதனை எண்ணி அவரது அருமை மனைவியருக்கும் அன்புமகள் பிறேமா, மக்கள் பேரப்பிள்ளைகளும் ஆறுதல் அடைவார்களாக. அமரர் அவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல வடக்கம்பறை அம்பாளையும் விசலத்தனை முருகப்பெருமானையும் இறைஞ்சுகிறேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இராமலிங்கம் நடராசா
(பொலிஸ் பென்சனர்)
சுழிபுரம், கிழக்கு

# குழந்தை உள்ளம் கொண்ட

## சின்னத்துரை நடராசா

என் அன்புக்குரிய நண்பன் நடராசா எனது மருந்தகத்துக்கு தினமும் வந்து காலை வந்தனம் சொல்லி ஏதாவது பத்திரிகை புதினங்கள் கதைப்பார்.

எனது தொழில் அநுகூலத்துக்கு கடவுள் வணக்கம் செய்து தொடங்க வேண்டுமென புத்திமதி கூறுவார். இக்கூற்று எனது வழமையான செய்கையை மேலும் பெலப்படுத்தியது.

இவர் ஒரு நாள் புதினப்பத்திரிகையின் வெட்டுத்துண்டு(Paper Cutting) கொண்டு வந்து தந்தார் அதில் " கண்ணன் சொன்னான் கீதையிலே உன் கடமையைச் செய்வாய் பாரினிலே " என்ற வாக்கியம் இருந்தது அதனை நான் மிகவும் போற்றி எனது மேசையின் முன் சுவரில் ஒட்டி வைத்தேன். எட்டு வருடங்களுக்கு மேலாக கிடந்த அத்துண்டு அவர் இறப்பதற்கு முன் ஏனோ கிழிந்து காணப்பட்டது.

அவர் இறந்ததன் பின்னர் அதனை நான் சிந்தித்த போது தான் அது ஓர் அபசகுணம் என்பதை உணர்ந்தேன்.

அவர் என்னிடம் கூறிய இன்னொரு வாக்கியம் " காலமும் அலையும் எவரையும் காத்திராது " (Time and Tide awaits no man) என்பதாகும். இக்கூற்றும் என்னை அவரைப்பற்றி சிந்திக்க வைத்தது.

அவர் வெள்ளை உள்ளம் படைத்தவர். அவர் எவரோடும் அன்பாக பேசுவார். தன்மனக் கருத்தை அச்சமின்றி வெளிப்படுத்துவார்.

அவரை இழந்து துயருறும் அவரது மனைவி மக்களுக்கு எனது ஆழ்ந்த அநுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆன்ம சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

Dr. க. நடராசா
அம்பாள் கிளினிக்
பண்ணாகம்.

## எனது காணிக்கை!

எல்லையிலா அன்புதனை அள்ளித் தந்து
எந்தன்மீது பாசம் வைத்த சீனிஐயா
தொல்லையென்றா வாழ்வுதனை நீயும் வெறுத்து
தூர இடம் போனதற்குக் காரணமோ?
பிறப்பு ஒன்று வாழ்க்கையிலே இருக்கும்போது
இறப்பு வரும் நாளுமொன்று இருக்குதையா
பத்து நாட்கள் பாய்தனிலே படுத்ததுமில்லை
பக்கத் துணை யாயிருந்து பார்க்கவுமில்லை
ஆனந்தி ஆனந்தி என்றெனை அழைத்து
ஆனந்தக் கதைகள் பல சொல்வது முண்டு
பாம்பினிலே சாரையைத்தான் கண்டு விட்டாலும்
கூட்டிச் சென்று வேடிக்கையாய்க் காட்டிடுவீரே
பிஸ்கற்ரொபி எனப்பலதாய்த் தின்பண்டங்கள்
இஸ்டமுடன் வாங்கிவந்து எமக் களிப்பீரே.
அறிவுரைகள் தத்துவங்கள் சிறிய கதைகளாய்
பொறுமையுடன் பொருள்விளங்கச் சொல்லி வைப்பீரே
சிங்கப்பூரில் புகழ்விளங்கும் வழக்கு விபரங்கள்
சிந்தனைக்கு உகந்தநல்ல கதைகளு மாக
வரணனையாய் வார்த்தைகளால் வடித்துச் சொல்லி
வாரிமுத்தம் தந்ததனை நாம் மறவோம்
உள்ளுக்கொன்று வெளியிலொன்று என இல்லாமல்
உள்ளமது வெள்ளைமனம் உண்மை ஐயா!
நடந்துவரும் போதுமெல்லப் பார்த்து நானும்
தத்திதத்தி நடந்துவரும் தங்கப் பாப்பா
என்றுபாடிக் கேலிபண்ண நீங்கள் இல்லையே
இன்றுஇந்த முற்றமதில் காண வில்லையே
படுத்தகட்டில் அயர்ந்தகதிரை பார்க்கும் போதெல்லாம்
பாவமெங்கள் சீனிஐயா உருவம் தோன்றுதே
உங்கள் மனக் கணிப்பினிலே என்றும் ஐயாநான்
சின்னஞ்சிறிய பிள்ளைபோல வாழ்ந்து கொள்ளுவேன்
எந்தன்மனதில் சீனிஐயா என்றும் வாழ்கிறார்
கந்தன்கழல் அடைந்துமுத்தி கண்டு கொள்ளுவார்
நன்றிசொல்லு என்பதெந்தன் மனதின் கோரிக்கை
அன்புசெய்தார் என்றும் வாழ்வார் இதுவே வாழ்க்கை
என்றும்எந்தன் மனம்நினைத்தால் என்ன வேடிக்கை
எங்களன்புச் சீனிஐயாவுக்கே கண்ணீர் காணிக்கை.

என்றும் எனது நினைவில் வாழும் சீனிஐயாவுக்கு
எனது கண்ணீர்ப்பூக்கள்

15-1-94 நன்றி மகள் ஆனந்தி (உஷா)

## அண்ணர் நடராசர் இறைஅடி சேர்ந்து விட்டார்

எனது உத்தியோக வாழ்க்கையிலே உத்தமர் நடராசா அவர்களுடன் உறவாடிப்பழகும் அதிர்ஷ்டம் எனக்கும் கிடைத்தது. கிட்டதட்ட 3 வருடங்களாக அவடைய வீட்டிலே எனது பணிமனை அமையப்பெற்றுள்ளது. எனக்கு கடமைக்கு நேரத்திற்கு வரவேண்டும் என்ற உணர்வை வாயாலே கூறாது செயலாலே உணர்த்தி நல்வழி காட்டியுள்ளார். இவர் தான் அன்றாடம் செய்யவேண்டிய எத்தக் கடமைகளையும் நேரம் தவறாது குறித்தநேரத்தில் கண்ணியமாகவும் கடமையுணர்வுடனும் செய்து முடிப்பார் அத்துடன் என்னிடம் விசாரித்து வருபவர்களிடம் கண்ணியமாகவும் அன்புடனும் நடந்து கொள்வார். நான் கடமையில் இருக்கும் போது 11 மணி என்றவுடன் தான் பார்த்து வந்த புதினப்பத்திரிகை புதினங்களை காக்கிருந்து கூறுவார். எமது நாட்டு நிர்வாகத்தையும் தான் பிறந்து வாழ்ந்த நாட்டின் நிர்வாகத்தினையும் ஒப்பிட்டு கூறுவார்.

குழந்தையுள்ளம் கொண்ட இவர் தனது வாழ்கையிலே கட்டுப்பாடு மிக்கவர் "கடமை கண்ணியம் கட்டுப்பாடு" என்ற கோட்பாட்டிற்கு அமைவாக வாழ்க்கை நடாத்தி வந்த நடராசர் அண்ணரை காலனும் கண்டுவிட்டார். இதை அறிந்தோ என்னவோ அண்ணர் நடராசர் அடிசேர்ந்து விட்டார்.

நாம் இங்கு மீளாத்துயரில் ஆழ்ந்துவிட்டோம். மண்ணில் பிறப்பவர் யாரும் மரணிப்பது உண்மையென்பதை உணர்ந்து அமைதி பெறுவோம். அவரது ஆத்மாசாந்தியடைய அம்பாள் அருளைவேண்டுகிறேன்.

திருமதி. தி. சிவயாக்கியநாதன்
கிராம சேவை அலுவலர்
தெல்லிப்பழை கிழக்கு.

உ

சிவமயம்

# ஆன்ம நேயமுடைய அம்பாள் பக்தன்

பழம் பெரும் பதியாம் தொல்புரம் பதியிலே பக்தர்கள் வழக்கம் பரை அம்பாள் புகழ் என்றென்றும் பாடுவர். பூத்த வளாகவும் எம்மையெல்லாம் காப்பவளாகவும் இருக்கும் அன்னையையேற்றிப் போற்றுவர். கண்ணீர் மல்கிக் கசிந்து உருகுவர் மாலை ஐந்துமணிக்கு இவ்வரிய காட்சிகளை அவள் சந்நிதி முன்றலில் காணலாம்.

தேவியின் புகழ்பாடுவதிலும் அவள்பெருமையைப் பேசுவதிலும் அலாதிப் பிரியம் உடையோர் அநேகர். அவர்களுள் அமரத்துவம் பெற்ற அன்பர் நடராஜாவும் ஒருவராவர். புன்னகை மன்னன். பொலிவுற வருவார் உலகமாதாவாகிய வழக்கம்பரை அம்பாளை வணங்கியபின் அன்பர்களுடன் உரையாடி மகிழ்வார். தன்னினிய மலேசிய நாட்டு சிங்கப்பூர் நாடுகளின் வளர்ச்சியையும் பொலிவினையும் சிறப்புறக் கூறுவார். ஈழநாட்டவரின் விருந்தோம்பல் பண்பை வியந்து போற்றுவார்.

மக்களின் வாழ்விற்கு மகேசன் துணையென்று மிருக்கவேண்டுமென மனதார வேண்டிக் கொள்வார். அன்பாகவும், பண்பாகவும் யாவரோடும் பழகுவதுடன் கால்நடைகளைப் பேணுவதிலும் அவற்றிடம் வைக்கும் அன்பிலும் அவரது கருணையுள்ளத்தைக் கண்டறியலாம். இத்தகைய இனியவர் யாவரது உள்ளத்தையும் கொள்ளை கொண்டவர். இன்றில்லையேயெனும் போது துயர் துன்பத்தை கூட்டுகிறது. கவலை கண்ணீரை வரவழைக்கிறது. எல்லாம் அவன் செயலே! நம்மகுருநாதர் வாரியார் சுவாமிகள் கூறிப் போத்த வாசகத்தை இங்கு நினைவு கூறுகின்றேன்.

" அவனே படைத்தான்
அவனே அழைத்தான் "

ஆகவே அவனடி தொழுவோம்! ஆறுதல் பெறுவோம்! அன்பர் நடராஜா அவர்களின் ஆன்மா சாந்தியுற ஆறுமுகனை வாழ்த்துவோமாக.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

பிரசங்க பூஷணம்
நடேசன் சிவசண்முகமூர்த்தி B. A.
முதன்மை ஆசிரியர்

தொல்புரம்
சுழிபுரம்

# நன்றி நவிலல் ⁂

29–12–1993 இல் இறைவனடி சேர்ந்த

அமரர்

## சின்னத்துரை நடராசா

அவர்களின் இறுதிக் கிரியையிலும், அந்தியேட்டி, சபிண்டி ஆகியவற்றில் நேரில்கலந்தும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும் துயரத்தில் பங்கு கொண்டதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்த அனைவர்க்கும், வேண்டிய உதவியையும், ஆதரவையும் நல்கிய அனைவர்க்கும், மற்றும் இவ் நினைவு நூலை ஆக்க உதவியோர்க்கும், சிறப்பாக அச்சிட்டு உதவிய அச்சகத்தார்க்கும் எமது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இங்ஙனம்
மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,

தொல்புரம்,
சுழிபுரம்.




திருவள்ளுவர் அச்சகம் 593, நல்லூர்.